# 40-வது ஆண்டு நிறைவு

# அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின்

# சுருக்கமான வரலாறு

**( ஆண்டு வாரியாக சபையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன.)**

நீண்டகாலமாக கண்டனம் செய்யப்பட்டுவந்த நவீனம் இன்று திருச்சபையில் காணக்கூடிய வகையில் ஊடுருவக் காரணமான 2-ம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே, தேவ பராமரிப்பினால் அசாதாரணமான மனிதரான உரோமை பிரெஞ்சு குருமடத்தின் தலைவரான சங். ஹென்றி லெ ஃப்ளாக் சுவாமியின் (Fr. Henri Le Floch) தொலைநோக்குப் பார்வை அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை ஏற்படுவதற்குக் காரணமாயிற்று. அவர் எதிர்காலத்தில் திருச்சபையின் அதிகாரிகளாகவும், குருக்களாகவுமாகவிருந்த சிறிய இளைஞர் குழுவை உருவாக்கினார். அவர்களுக்கு நவீனமாகிய தப்பறையின் உண்மையான இயல்பினை காண்பித்து, பாரம்பரியத்திற்கு பிரமாணிக்கமாய் இருக்கும்படி அவர் கற்பித்தார். இந்த உந்நத குருவான சங். லெ ஃப்ளாக் சுவாமியிடம் பயின்ற அநேக குருமாணவர்கள் பிற்காலத்தில் நவீனத்திற்கு எதிரான வந். லெ ஃபவர் ஆண்டகையின் செயல்பாடுகளுக்கு பெரும் துணையாக இருந்தார்கள்.

## 1968-69

1968-ம் ஆண்டின் வசந்த காலத்தில் சுவிட்சர்லாந்து நாட்டின் சக்ஸோன் பகுதியில் சில விசுவாசிகள் ஈக்கோன் என்ற இடத்தில் வயல்வெளி மற்றும் அதில் அமைந்துள்ள பழைய சிற்றாலயத்தை விலைகொடுத்து வாங்கினார்கள். அது முன்பொரு காலத்தில் அர்ச்.பெர்நார்டு துறவிகள் (Cannons of St. Bernard) என்பவர்களுக்கு சொந்தமாயிருந்தது. அதில், விளைநிலங்களின் மாதா (Our Lady of the fields) சேத்திரமும் அமைந்திருந்தது. அது பராமரிக்கப்படாமல்

கைவிடப்பட்டிருந்ததால் தல மேற்றிராணியார் அதனை விற்க முனைந்தார். அது தெய்வ பயமற்றவர்கள் கையில் அகப்பட்டு உணவகமாகவும், இரவுநேர கேளிக்கை விடுதியாகவும், மாற்றப்படவிருந்த நிலையில் உள்ளூர் கத்தோலிக்கர் சிலரால் விலை கொடுத்து மீட்கப்பட்டது.

அதே ஆண்டில் திவ்விய இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையின் பொது சபை கூடி, 2-ம் வத்திக்கான் சங்கத்தின் போதனைக்கு ஏற்ப தமது சபை சட்ட ஒழுங்குகளை மாற்றியமைத்து, சபையின் பொது அதிபராக இருந்த அதிமேற்றிராணியார் மிக.வந். லெ.ஃபவர் ஆண்டகையவர்கள் உரோமை துறவியர் பரிசுத்த சங்கத்திடம் இந்த புதிய மாற்றங்களை எதிர்த்தார். இப்படி முறையிட்டும் ஒன்றும் செய்யமுடியாததால் தமது பொது அதிபர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, உரோமையில் ஒரு மடத்தில் தமது எஞ்சிய வாழ்வை அமைதியில் கழிக்கச் சென்றார்.

1968 மே மாதத்தில், உரோமையில் இருந்த பிரெஞ்சு குருமடத்தில் ஒரு அசம்பாவிதம் நடந்தது! அது என்னவென்றால், பாரீஸ் நகரில் நடந்த மாணவர் புரட்சிக்கு ஆதரவாக குருமடத்தில் கம்யூனிஸ்ட் கொடி பிரதான பால்கனியில் தொங்கவிடப்பட்டது. ஒரு தலைமுறைக்கு முன்பு சங். Le Floch என்ற பாரம்பரிய பரிசுத்த குருவானவர் தலைவராக இருந்து நடத்திவந்த குருமடத்தில், நவீனமும், நாத்தீகமும் புகுந்திருந்தது! நவீன போதனைகளை விரும்பாத சில உத்தம குருமாணவர்கள் இந்த மாற்றத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்கள். பாரம்பரிய குருத்துவ பயிற்சி பெற வேண்டும் என்பதற்காக அந்த நவீனமாகிப் போன குருமடத்தை விட்டு வெளியேறி தனியே ஓய்வில் இருந்த அதிமேற்றிராணியார் லெ.ஃபவர் ஆண்டகையின் உதவியை நாடினர்.

நவீனத்தை வெறுத்து, எதிர்த்து வேதனையுடன் ஒதுங்கியிருந்த அதிமேற்றிராணியார் அந்த மாணவர்களுக்கு உதவ முன்வந்தார். அவர்களுக்கு பாரம்பரிய குருத்துவ பயிற்சி வழங்கி சிறந்த கத்தோலிக்க குருக்களாக அவர்களை உருவாக்க முனைந்தார். அவர்களை தங்க வைக்க இடம் தேடிய ஆண்டகை தமது நண்பர்களின் ஆலோசனையின்படி இன்னமும் நவீனமடையாத சுவிட்சர்லாந்தில் உள்ள ஃபிரிபூர்க் பல்கலைக்கழகத்தில்

பயிற்றுவிக்க முடிவுசெய்தார். இதைக் குறித்து நடந்தவைகளை லெ.ஃபவர் ஆண்டகையின் வார்த்தைகளில் காண்போம்:

"...குருமாணவர்களுக்கு ஏதாவது செய்து உதவும்படியாகவும் அவர்களை எனது தனிப்பட்ட பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்படியாகவும் என்னை கட்டாயப்படுத்த விரும்பியவர்களிடம் நான் கூறியதாவது: "வந். ஷரியேர் ஆண்டகையை நான் சந்திப்பேன்; அவர் என்னிடம், 'இதைச் செய்யுங்கள்' என்று கூறினால் அது சர்வேசுரனுடைய சித்தத்தின் அடையாளம் என்று எடுத்துக்கொள்வேன்" இப்படி நான் கூறியதற்கு காரணம், மெய்யாகவே அக்காரியத்தை நான் செய்ய விரும்பவில்லை; எனக்கு 65 வயதாகிவிட்டதால் இப்பேர்ப்பட்ட பெரிய காரியத்தை என்னால் செய்ய இயலாது. ஆகையால்தான் நான் விரும்பவில்லை. ஆனால் மேற்றிராணியார்: 'நீங்கள் கண்டிப்பாக, இதனை செய்ய வேண்டும். ஏதாவது செய்யுங்கள். ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொள்ளுங்கள். இந்த குருமாணவர்களை கைவிட்டுவிடாதீர்கள். திருச்சபையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் நல்ல பாரம்பரியத்தை முழுவதுமாக கைக்கொள்வது அவசியம்' என்று கூறினார். இதுவே எனக்கு அடையாளம். சபை ஒரு தனிப்பட்டவரின் அலுவல் அல்ல; அது நிச்சயமாக சர்வேசுரனுடைய வேலை..."

இப்படியாக, அதிமேற்றிராணியார் லெ.ஃபவர் ஆண்டகை அந்த குருமாணவர்களை ஏற்றுக் கொண்டார். "அர்ச். பத்தாம் பத்திநாதர் குருத்துவ பயிற்சி அமைப்பு" (St. Pius X Association of Priestly Training) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சுவிட்சர்லாந்து ஃபிரிபூர்க் நகரில் டொன்போஸ்கோ இல்லம் என்ற சலேசிய சபையின் தங்கும் விடுதியில் 12 அறைகள் வாடகைக்கு எடுக்கப்பட்டன. 1969-70-ம் கல்வி ஆண்டிற்கான குருத்துவ பயிற்சி துவங்கியது. 1969 அக்டோபர் 13-ல் குருமாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (அதில், பின்னாளில் மேற்றிராணியாராக அபிஷேகம் பெற்ற வந்.திஸ்ஸியர் ஆண்டகையும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.) வந்.லெ.ஃபவர் ஆண்டகை குருமட அதிபராக பொறுப்பேற்றார். தாம் பயின்ற பிரெஞ்ச் குருமட ஒழுங்குகளையே தமது குருமாணவர்களுக்கும் கொடுத்தார். அக்டோபர் 17-ல் குருத்துவ உடையை மாணவர்கள் பெற்றனர். புதிய பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட 3-வது நாளில், (1969, அக்டோபர் 16) தமது நண்பரும் பிரேசில் நாட்டு காம்போஸ்

மேற்றிராணியாரான வந். காஸ்ட்ரோ மேயர் ஆண்டகைக்கு எழுதிய கடிதத்தில்: "நான் உண்மையான குருக்களோடு உண்மையான குருத்துவத்தை மீண்டும் கட்டியெழுப்ப விரும்புகிறேன். நாம் வாழும் இந்த முட்டாள்தனமான உலகத்தில் இது ஒன்றுதான் எனக்கு ஆறுதலாக இருக்கிறது…" என்று குறிப்பிட்ட லெ ஃபவர் ஆண்டகை காலையில் திவ்விய பலிபூசை நிகழ்த்தி, குருமாணவர்களை காலை மாலை ஜெபம் செய்யவும், கட்டளை ஜெபத்தை ஜெபிக்கவும் செய்தார்.

மாணவர்கள் அருகிலுள்ள ஃபிரிபூர்க் பல்கலைகழகத்துக்கு காலையில் சென்று மாலையில் திரும்பி வந்து, 'டொன்போஸ்கோ' இல்லத்தில் தங்கினர்.

இந்த சமயத்தில்தான் 1969 ஆகமன காலத்தின் முதல் ஞாயிறிலிருந்து "புதுப்பூசை" ஃபிரிபூர்க் மேற்றிராசணத்தில் நடைமுறைக்கு வந்தது. அந்த மேற்றிராசனம் புதுப்பூசையை ஏற்றுக்கொண்டாலும் லெ ஃபவர் ஆண்டகை அதனை மறுத்து பாரம்பரிய பூசையையே நிறைவேற்றினார். கர்தினால் ஒட்டாவியானி "புதுப்பூசை கடுமையான ஆபத்துக்களைக் கொண்டுள்ளது. புராட்டஸ்டாண்டாரின் இராவுணவு பற்றிய கருத்தினை நாளடைவில் கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்ளும் ஆபத்து உள்ளது" என்று எச்சரித்திருந்தார். லெ ஃபவர் ஆண்டகையின் வழிநடத்துதலால் விசுவாசத்தில் உறுதியடைந்த குருமாணவர்கள் குருத்துவ பயிற்சியை தொடர்ந்தனர்.

டிசம்பர் மாதத்தில் ஆண்டகை நோய்வாய்ப்பட்டார். குருமடத்தை கவனிக்க சங்.க்ளெர் என்பவர் கேட்டுக்கொள்ளப்பட, வந்தது வினை! ஆம்! நவீன கருத்துக்களை ஆதரிப்பவரான அவர் குருமாணவர்களுக்கு நச்சுப்போதனையை விதைக்கலானார். குருமாணவர்கள் பல்கலைகழகத்துக்கு போகும்போது குருத்துவ உடையணிய தேவையில்லை - அது அவர்களை பிரித்துக்காட்டும் என்றும், பரிசுத்ததனம் தேவையில்லை என்பது போன்ற கருத்துக்களால் குழப்பினார்.

இதனை கேள்விப்பட்ட ஆண்டகை உடல்நலம் சற்றே தேறிய நிலையில், மாணவர்களை தமது பொறுப்பில் ஏற்றுக்கொண்டு, போதிக்கப்பட்ட நச்சுக்கருத்துக்களை அகற்ற ஆவன செய்தார். இந்த குழப்பத்தால் ஏப்ரல் 15-ல் 9 மாணவர்களில் 5 பேர் மட்டுமே நிலைத்திருந்தனர். எனவே தமது குருமாணவர்கள் சற்றேனும் நவீனமாகிய நச்சுக்கருத்துக்களால்

பீடிக்கப்படாதபடி ‘கோழி தன் குஞ்சுகளை காப்பதுபோல்’  அந்த 5 குரு மாணவர்களைப் பாதுகாத்து வந்தார். அதே சமயம் குருமாணவர்கள் தினமும் பல்கலைகழகத்துக்குச் சென்று வருவது அவர்களது ஞான வாழ்வுக்கு உகந்ததல்ல என்பதை உணர்ந்த வந். லெ஀பவர் ஆண்டகை மாணவர்கள் தங்கி பயில ஏதுவான இடத்தைத் தேடினார்.

# 1970

## ஈக்கோன் குருமடம்

ஏற்கனவே குறிப்பிட்டபடி ஈக்கோன் பண்ணை நிலங்கள் உள்ளூர் கத்தோலிக்க விசுவாசிகளால் காப்பாற்றப்பட்டு, அவர்களது பொறுப்பில் இருந்து வந்தது.

அதனை மேற்றிராணியாரின் உரோமை குருமட நண்பரான சங். போவென் சுவாமி மற்றும் ரீட் பங்குத் தந்தை சங்.. பியர் எப்பினே சுவாமியின் உதவியோடு ஈக்கோன் பண்ணை நிலத்தை வந்.லெ஀பவர் ஆண்டகைக்கு வழங்கினார்கள். வரலாற்று சிறப்பு மிக்க ஈக்கோன் எதிர்கால குருக்களை உருவாக்கும் அலுவலுக்குப் பயன்படப்போவதை அறிந்து அந்த சுவிஷ் நாட்டு விசுவாசிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

எதிர்பாராத இக்கொடையைக் கண்டு அகமகிழ்ந்த வந்.லெ஀பவர் ஆண்டகை தேவ பராமரிப்புக்கு நன்றி செலுத்தினார். எல்லாம் தயாராகவே குருமாணவர்கள் இதுவரை தாங்கள் நம்பியிருந்த ஀பிரிபூர்க் டொன் போஸ்கோ இல்லத்திலிருந்து வெளியேறி செப்டம்பர் மாதத்தில் ஈக்கோன் குருமடத்திற்கு தங்களது முதல் வருட குருத்துவக் கல்வியைத் தொடர இடம் பெயர்ந்தனர். இதனை சீயோன் மேற்றிராணியார் வந்.நெஸ்டர் ஆடம் ஆண்டகை அங்கீகரித்தார்.

நவம்பர் முதல் நாளில் லூசான், ஜெனிவா மற்றும் ஀பிரிபூர்க் மேற்றிராசணத்தின் மேற்றிராணியார் வந். ஷரியேர் ஆண்டகை அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையை அங்கீகரித்து அதன் ஒழுங்குகளை உறுதி செய்து, தமது மேற்றிராசனத்தில் செயல்பட வழி செய்தார்.

## 1971-1974

வந். லெ.ஃபவர் ஆண்டகை தமது சபையின் திருச்சட்டப்படியான அங்கீகாரத்தின் இரண்டாவது நிலைக்காக அதிக காலம் காத்திருக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார். ஆனால் நான்கே மாதங்களில் அதாவது, 1971 பிப்ரவரியில் திருச்சபையின் குருக்களுக்கான பரிசுத்த சங்கத்தின் தலைவராகிய கர்தினால் ரைட் ஆண்டகையின் அதிகாரப்பூர்வமான ஒப்புதலை பெற்றார். உரோமையின் அதிகாரபூர்வமான ஆணைப்பத்திரங்கள் சபையினுடைய சர்வதேச தன்மையை ஏற்றுக்கொண்டது. அதாவது சபை, “அர்ச். 10-ம் பத்திநாதர் சர்வதேச குருக்கள் சபை” என்ற அந்தஸ்தைப் பெற்றது!

கர்தினால் ரைட் ஆண்டகை, உலகில் கத்தோலிக்க குருக்களின் எண்ணிக்கையை சபை அதிகரிக்கும் என்பதை எண்ணி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

விசுவாச உணர்வுடன் செய்த இச்சிறிய செயல், அதிகமான ஆதரவும் ஊக்கமும் பெறுவதைக் கண்டு சபையின் ஸ்தாபகர் வந். லெ.ஃபவர் ஆண்டகை ஆச்சரியமடைந்தார்! சபையின் அலுவலுக்கு சில குருக்கள் அவரோடு இணைய விரும்பினர். இதனை உரோமை அதிகாரிகளிடம் சமர்ப்பித்து வேண்ட, அவரது எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்ப, திருச்சபையின் உரோமை ஆட்சி மன்றம் (Roman Curia) அத்தகைய குருக்களை அவரவர்களின் மேற்றிராசணிமார்களின் ஆளுகையிலிருந்து விடுவிக்கவும், துறவியர்களாக இருக்கும்பட்சத்தில் அவர்களை துறவற சபைகளிலிருந்து விடுவித்து, அர்ச். 10-ம் பத்திநாதர் சபையில் முழுமையாக சார்ந்திருக்கத் தேவையான ஆணைகளைப் பிறப்பித்தது!

உரோமையின் இந்த அதிகாரப்பூர்வமான நடவடிக்கை, அர்ச். 10-ம் பத்திநாதர் சபை உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் உரிமையை (Incardination) அங்கீகரித்தது. திருச்சபை வழங்கிய இந்த அங்கீகாரமும், ‘அவசர தேவை’ (State of necessity) என்ற சூழ்நிலையும்தான் 1988-ல் மேற்றிராணிமார் அபிஷேகம் செய்யப்படுவதற்கு பிரதான காரணங்களாயிருந்தன!

1971-ல் 24 குருமாணவர்கள் ஈக்கோன் குருமடத்தில் சேர்ந்தார்கள். இது 1972-ல் 32 ஆக அதிகரித்தது. இந்த சமயத்தில் பிரான்ஸ் நாட்டின் நவீன ஆயர்கள்

இந்த இளம் சபையின் வளர்ச்சியை கூர்ந்து கவனித்து வந்தனர். முதலில் சற்று அலட்சியமாக இருந்தவர்கள், இப்போது அதனுடைய எதிர்பாராத வெற்றியைக் குறித்து பொறாமை கொண்டார்கள். அதனை அழிக்கும் நோக்கில் விரோத பிரச்சாரத்தில் ஈடுபடத் துவங்கினார்கள். எப்படியாவது, பாரம்பரியத்தை தழைக்கச் செய்யும் ஈக்கோன் குருமடத்தை மூடிவிட வழி தேடினார்கள்.

ஈக்கோன் குருமடத்தை மூடிவிட வேண்டும் என்ற சதி நடந்து கொண்டிருக்க, 1973-ல் மிஷிகன், அர்மடாவிலும் 1974-ல் உரோமிலுள்ள அல்பானோவிலும் சபையானது தனது குருமடங்களைத் திறந்தது! பிரெஞ்சு ஆயர்களோ சபையை தடை செய்யும்படியாக உரோமையை நிர்ப்பந்திக்கத் தொடங்கினார்கள்.

1974 நவம்பரில் உரோமையிலிருந்து இரண்டு அப்போஸ்தலிக்க அதிகாரிகள் ஈக்கோன் குருமடத்திற்கு வருகை தந்தார்கள். அவர்கள் நவீனர்களாக இருந்தாலும், குருமடத்தின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு சாதகமான அறிக்கையை உரோமைக்கு வழங்கினார்கள்.

## 1975

இவ்வாண்டிலே, அதிமேற்றிராணியார் வந். லெ∴பவர் ஆண்டகைக்கு எதிராக மிகப்பெரிய பிரச்சாரம் துவங்கியது. சதித்திட்டங்களும், எதிர்ப்புகளும் குருமடத்தின் சூழ்நிலையை கடுமையாக்கியது.

பிப்ரவரியில் மூன்று கர்தினால்மார்கள் லெ∴பவர் ஆண்டகையை விசாரித்தார்கள். அவர்களில் ஒருவரான பிரெஞ்சு கர்தினால் காரோன் என்பவர் அதிமேற்றிராணியார் ‘முட்டாள்’ என்று நேரடியாகவே அழைத்தார்.

மே மாதத்தில் சபை, திருச்சபையின் சட்டவிதிகளுக்கு விரோதமாக, அநியாயமான முறையில் செல்லத்தகாத வகையில் தடை செய்யப்பட்டது. இதனை எதிர்த்து திருச்சபையின் அப்போஸ்தலிக்க உயர்நீதி மன்றத்துக்கு (Apostolica Signatura) மேல் முறையீடு செய்யும் லெ∴பவர் ஆண்டகையை, பிரெஞ்சு கர்தினால் வியோ கட்டாயப்படுத்தினார். அதோடு நின்றுவிடாமல் வத்திக்கானின்

தலைமைச் செயலாளரான கர்தினால் வியோ உலகின் அனைத்து மேற்றிராணிமார்களுக்கும் கடிதம் எழுதி, அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் உறுப்பினர்களுக்கு எவ்விதமான ஆதரவும் உதவியையும் மறுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

திருச்சபையின் ஐக்கிய அங்கீகாரம் இல்லாமல் குருத்துவ அலுவல் இருக்க முடியாது. அதோடு சபை தடைசெய்யப்பட்டுவிட்டதால் அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகை குருப்பட்டம் வழங்க முடியாது என்ற நிலை உருவாக்கப்பட்டது. ஆண்டகையவர்களோ இந்த சட்ட விரோதமான கண்டணத்திற்கு பதிலளித்தார். அவ்வாண்டு ஜுபிலி ஆண்டானபடியால், ஞானப்பலன்களைப் பெறுவதற்கு சபையின் அனைத்து உறுப்பினர்களும் உரோமைக்கு திருயாத்திரையாகச் சென்றனர். சபையினரின் விசுவாசம் நிறைந்த பவனியைக் கண்ட எதிரிகளும் வியந்துபோனார்கள்!

## 1976

அவ்வேளையில், பாப்பரசராக இருந்த 6-ம் சின்னப்பர் அதிமேற்றிராணியாரை புதுத் திருவழிபாட்டிற்கு கீழ்ப்படியாதவர் என்று புறக்கணித்தார். இதில் விந்தை என்னவென்றால் உரோமை அதிகாரி கர்தினால் பெனலி, லெஃபவர் ஆண்டகை ஒருமுறை மட்டும் புதுப்பூசையை செய்தால் உரோமையுடனான அவரது எல்லாப் பிரச்சனைகளும் உடனடியாகத் தீர்ந்துவிடும் என்று பாப்பரசர் பெயரால் அவருக்கு வாக்களித்தார்! ஆனால் இதனை அதிமேற்றிராணியார் வந். லெஃபவர் ஆண்டகை மறுத்து அவ்வருடம் ஜுன் 29-ம் தேதியில் தாம் உருவாக்கிய 12 குருமாணவர்களுக்கு குருப்பட்டம் அளித்தார். அதைத் தொடர்ந்து, ஜூலையில் வத்திக்கான் குருக்கள் சபையை மூடும் ஆணையைப் பிறப்பித்தது. ஆனால் லெஃபவர் ஆண்டகைக்கு விசுவாசிகளின் ஆதரவு பெருகியது. அவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் லீல் என்ற நகரில் 10,000க்கும் அதிகமான விசுவாசிகள் கூடி, ஆண்டகையவர்களுக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

# 1977

பிப்ரவரியில் பிரான்ஸ் நாட்டு தலைநகர் பாரீசில் ஒரு வியப்புக்குரிய செயல் நடைபெற்றது. அது என்னவெனில், அந்நகரில் உள்ள புகழ்பெற்ற அர்ச்.நிக்கோலாஸ் தேவாலயம், நவீன குருக்களிடமிருந்து விடுவிக்கப்பட்டு அந்த பங்கிலுள்ள பாரம்பரிய கத்தோலிக்கர்கள் நவீன பூசைக்கும், குருக்களுக்கும் எதிராக கிளம்பி தேவாலயத்தைக் கைப்பற்றி பாரம்பரிய குருக்கள் பொறுப்பில் ஒப்படைத்தனர். இங்கு அர்ச்.10-ம் பத்திநாதர் சபை குருக்கள் குருத்துவ அலுவலில் ஈடுபடத் துவங்கினர்.

இவ்வாண்டு இறுதியில் சபையில் திருச்சபையின் கண்டனத்திற்குப் பிறகும் 38 புதிய குருமாணவர்கள் சேர்ந்திருந்தார்கள். அந்நேரத்தில் சபையில் 40 குருக்களும், 150 குருமாணவர்களும் இருந்தார்கள். மேலும் 20 குருக்கள் இல்லங்களும், 3 குருமடங்களும் இருந்தன.

அதே ஆண்டில், அர்ச். 10-ம் பத்திநாதர் கன்னியர் சபை ஏற்படுத்தப்பட்டது. அவர்களுக்காக நவசந்நியாச மடம் உரோமை அல்பானோவிலும் தலைமையிடம் St. Micheal-en-brenne என்னும்மிடத்தில் சங். மேரி கபிரியேல் லெ.ஃபவர் தாயாரின் வழிநடத்துதலில் செயல்படலாயிற்று. இந்த் தாயார் அதிமேற்றிராணியார் லெ.ஃபவர் ஆண்டகையின் உடன்பிறந்த சகோதரியாவார்.

# 1978

இதற்கிடையே ஆகஸ்ட் 6-ம் நாளன்று பாப்பரசர் 6-ம் சின்னப்பர் மரணமடைந்தார். அவருக்குப் பின்னர், முதலாம் அருள் சின்னப்பர் 33 நாட்களுக்குள் மறைந்தார். அக்டோபர் 16-ல் புதிய பாப்புவாக 2-ம் அருள் சின்னப்பர்  வந்தார். அப்பொழுதுதான் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி நடந்தது. புதிய பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பர் அதிமேற்றிராணியார் லெ.ஃபவர் ஆண்டகையை நவம்பர் 16-ம் தேதி வத்திக்கானில் சந்தித்தார். நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் பாப்பரசர் பாரம்பரிய பூசையின் மீதான இடையூறுகளையெல்லாவற்றையும் அகற்றுவதான தமது விருப்பத்தைக் கூறினார். ஆனால் அவருக்கு அருகில் நின்றுக் கொண்டிருந்த தலைமை செயலர் கர்தினால் செபேர் உடனே குறுக்கிட்டு, இவர்கள் இந்த பூசையை

வைத்துக்கொண்டு கொடி பிடிக்கத் துவங்கிவிடுவார்கள் என்ற தமது மறுப்பைத் தெரிவிக்க பாப்பரசரின் மனம் மாறியது!

சபை அர்ஜெண்டினாவில் சிறிய புதிய குருமடத்தை ப்யோனஸ் ஏரிஸில் திறந்தது. அதில் 12 குருமாணவர்கள் சேர்ந்தார்கள். சங். புல்வெர் மார்க்கர் சுவாமி என்ற சபையின் நண்பர் ஏஞ்சலுஸ் அச்சகத்தையும் ஏஞ்சலுஸ் (Angelus) என்ற ஆங்கில மாதாந்திர பத்திரிகையையும் துவக்கினார்.

இவ்வாண்டில் குருக்கள் சபையானது பிரான்ஸ் நாட்டில் 4 குருக்கள் இல்லங்களையும், ஸ்பெயின் நாட்டு மட்ரீட்டில் ஒரு குரு இல்லத்தையும் தொடங்கியது. அதே ஆண்டு வைஸ்பாத்தில் இருந்த குருமடம் சைட்ஸ் காஃபன் (Zaitfkofen) நகருக்கு மாற்றப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில், கான்ஸாசில் ஏறக்குறைய அழிந்துபோன செயிண்ட் மேரிஸ் என்ற சேசு சபைக் கல்லூரியை விலைக்கு வாங்கியது.

## 1979

சுவிட்சர்லாந்து நாட்டில் ரிக்கென்பாக் என்ற நகரில் ஒரு பழைய விடுதி வாங்கப்பட்டு சபையின் முதல் பொது இல்லமாக (General House) மாற்றப்பட்டது. இத்தாலியில் தியான இல்லத்துக்கென தூரின் நகருக்கருகேயுள்ள Montalenghe என்னுமிடத்தில் பெரிய கட்டிடங்களைக் கொண்ட இடம் வாங்கப்பட்டது. அமெரிக்காவிலுள்ள குருமடம் கனக்ழக்கட் ரிட்ஜ்ஃபீல்ட் என்னுமிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. ஆகஸ்ட் 15-ல் கான்சாஸில், செயின்ட் மேரீஸ் வளாகத்தில் முதல் மாதா திருயாத்திரை நடைபெற்றது. அதற்கு அதிமேற்றிராணியார் வருகை தந்தார். அதுபற்றி அவர் எழுதுகையில்: “இது மிகப் பெரிய வெற்றியாகும். எல்லா இடங்களிலிருந்தும் 2000-க்கும் மேற்பட்ட மக்கள் வந்திருக்கிறார்கள். இந்த இடம் அனைத்து அமெரிக்கர்களுக்கும் ஒரு பெரிய திருத்தலமாகவும், இந்த நாட்டில் பெருகிவரும் ஒழுக்கச் சீர்கேட்டை தடுத்து நிறுத்தும் வல்லமையைக் கொண்டவர்களான பரிசுத்த கன்னிகையை நோக்கிய பக்திக்கும், ஜெபத்திற்கும், ஏற்ற இடமாகத் திகழ வேண்டுமென்று ஆசிக்கிறேன்” என்றார்.

அதே ஆண்டு செப்டம்பர் 23-ம் நாள் அதிமேற்றிராணியார் வந். லெ ஃபவர் ஆண்டகையின் குருத்துவ பொன் விழா ஜுபிலி பிரான்ஸ், பாரீசில் கொண்டாடப்பட்டது.

## 1980

அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் 10-வது ஆண்டு நிறைவுற்றது. அவ்வேளையில் வந்.லெ ஃபவர் ஆண்டகை: "..திருச்சபையின் நலன்களுக்காகவும், விவேகமற்ற விதமாய் தாறுமாறான காரியங்களில் தங்களையே உட்படுத்தியிருக்கும் திருச்சபை அதிகாரிகள் அவைகளிலிருந்து வெளியே வருவதற்கு அவர்களுக்கு உதவ கடந்த 10 ஆண்டுகளாக நாம் கொண்டிருந்த மனப்பான்மை எவ்வித தயக்கமின்றி தொடரப்பட வேண்டும் இந்த ஆண்டு விழாவின் நோக்கம் அர்ச்சிப்பினுடையவும், வரப்பிரசாதத்தினுடையவும் ஊற்றாகிய விசுவாச சத்தியங்களை பாதுகாப்பதாக (Depositum Custodire) இருக்கட்டும்" என்று எழுதினார்.

இவ்வாண்டில் பாரீஸ் நகரில் அர்ச். 10-ம் பத்திநாதர் பல்கலைகழகத்தை திறப்பது பற்றிய அறிவிப்பை ஆண்டகை வெளியிட்டார். மே மாதத்தில் அவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு விஜயம் செய்து, கான்சாஸ் நகரில் அண்மையில் வாங்கப்பட்ட அர்ச். வின்சென்ட் தே பவுல் ஆலயத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். இவ்வருடம் ஈக்கோன் குருமடத்திற்கு 9 குருமாணவர்கள் அர்ஜெண்டினாவில் இருந்து வந்தனர். அமெரிக்காவில் உள்ள ரிட்ஜ் ஃபில்டு குருமடத்தில் 12 புதிய குருமாணவர்கள் சேர்ந்தனர்.

## 1981-1983

உரோமையில் பாப்பரசரின் ஸ்தானாதிபதியான கர்தினால் செபேர் ஆண்டகை, அர்ச். 10-ம் பத்திநாதர் சபையோடு பேச்சு வார்த்தை நடத்தி, பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டுவர ஒரு கர்தினாலை அனுப்பி வைப்பதாக கடிதம் எழுதினார்.

லெ ஃபவர் ஆண்டகை தென் ஆப்பிரிக்காவிற்கும், பிறகு அர்ஜெண்டினாவுக்கும் ஒரு நீண்ட அப்போஸ்தலிக்க பயணத்தை

மேற்கொண்டார். அர்ஜெண்டினாவில் La Reja என்னுமிடத்தில் குருமடம் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார். பின்னர் நண்பரான மேற்றிராணியார் தெ காஸ்ட்ரோ மேயர் ஆண்டகையின் அழைப்பிற்கிணங்க பிரேசில் நாட்டிற்கு விஜயம் செய்தார். அங்கே மேயர் ஆண்டகை பாரம்பரிய விசுவாசத்தின் நிமித்தம் மேற்றிராசன பொறுப்பிலிருந்து கட்டாய ஓய்வு எடுக்கும்படி நவீன அதிகாரிகளால் கட்டாயப்படுத்தபட்டிருந்தார்.

பிறகு, லெஃபவர் ஆண்டகை ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்து சிட்னி நகரில் முதல் குருக்கள் இல்லம் (Priory) அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இதற்கிடையில் உரோமையில் சபையோடு சற்று இணக்கமாயிருந்த செபேர் ஆண்டகை மரணமடைந்தார். அதனால் அவர் அக்டோபரில் எழுதியிருந்த கடிதம் எந்த ஒரு பயனையும் விளைவிக்காமல் போனது!

உரோமையில் காலஞ்சென்ற கர்தினால் செபேருக்குப் பிறகு கர்தினால் ஜோசப் ராட்சிங்கர் பாப்புவின் தனிப்பட்ட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். மார்ச் மாதத்தில், லெஃபவர் ஆண்டகை அவரை சந்தித்து மிக நீண்ட நேரம் உரையாடினார். அப்போது, பல தப்பறைகள், தவறான எண்ணங்கள் இருந்தாலும் திருவழிபாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சீர்திருத்தங்கள், அடிப்படையில் நல்லதே என்று அர்ச்.10-ம் பத்திநாதர் குருக்கள் சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் அதனை மறுத்த அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகை, "...திருவழிபாட்டுச் சீர்திருத்தங்கள் தீமையானது என்று நாம் நம்புகிறோம். அது எக்குமெனிசத்தால் நஞ்சூட்டப்பட்டுள்ளது. அதனை நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். எல்லா விசுவாசிகளும் அதனை எதிர்க்கும்படி ஆலோசனை கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். விசுவாசம், நல்லொழுக்கம், கத்தோலிக்க அமைப்புகளின் அழிவைக் கண்டுகொள்ளாமல் எவ்வளவு காலந்தான் இந்த சீர்திருத்தவாதிகள் தங்கள் கண்களை மூடிக்கொள்வார்கள்! இது சர்வேசுரன் மட்டுமே அறிவார்…" என்று கூறினார்.

மார்ச். 20-ம் நாளன்று ஈக்கோனுக்கு அருகில் உள்ள மார்டினி (Martigny) நகரில் பாத்திமா மாதா கேட்டுக் கொண்ட ஜெப தவத்தை வலியுறுத்தி முழு இரவு ஜெபம் நடத்தப்பட்டது. அர்ச்.10-ம் பத்திநாதர் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இதில் 3000-க்கும் அதிகமான திருயாத்திரிகர்கள் பங்கேற்றனர்.

இறுதியில், உலகமும் குறிப்பாக ரஷ்ய நாடும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் முதல் பொதுச்சங்கம் (Chapter) செப்டம்பரில் ஈக்கோனில் கூட்டப்பட்டது. அதில் சபையின் கொள்கைகள், சட்டத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. திருச்சபையில் தற்போது நிலவிவரும் பிரச்சனைகளில் மேய்ப்புப்பணியை நடத்துவது குறித்தும், திருவழிப்பாட்டில் ஏற்பட்ட  மாற்றங்கள், தவறான எக்குமெனிசத்திற்கு எதிராக எச்சரிக்கை செய்வது மற்றும் பாப்பரசரின் ஆசனம் வெறுமையாயுள்ளது போன்ற கருத்துக்களை மறுப்பது என்ற தன்னுடைய கொள்கை முடிவை சபையானது வெளியிட்டது.

இந்த பொதுசபையில் சங். பிரான்சிஸ் சுமிட்பெர்க்கர் சுவாமி, சபையின் சிரேஷ்டராக தேர்ந்தெடுக்கப்பட்டார். குருமடங்களில் பயிற்சி காலமானது 5 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகளாக அதிகரிக்கப்ட்டது.

மார்ச் மாதத்தில், அர்ச். இஞ்ஞாசியார் தியானங்களின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட சங். பாரியேல் சுவாமி ஈக்கோனில் மரணமடைந்தார். அவர் நீண்ட நாட்களாக ஈக்கோன் குருமடத்தில் ஆன்ம இயக்குநராக இருந்தவர். அவரே, இஞ்ஞாசியார் தியானம் பற்றிய ஆர்வத்¡தயும், அதனை கொடுப்பதற்காக பயிற்சியையும் சபை குருக்களுக்கு வழங்கி அவர்களைத் தயாரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜுன் 28-ல் ஈக்கோனில் புதிய குருக்கள் குருப்பட்டம் பெற்றனர். அதில் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த குருமாணவர் குருப்பட்டம் பெற்றார். எண்ணற்ற குருக்களையும் வேத போதகர்களையும் திருச்சபைக்கு ஒரு காலத்தில் வழங்கிய அந்த நாட்டிலிருந்து அநேக தேவ அழைத்தல்களை சர்வேசுரன் வழங்க வேண்டுமென்று, லெ◌ஃபவர் ஆண்டகை பெரிதும் ஆசித்தார்!

## 1984

இந்த ஆண்டு மார்ச் மாதம், பாப்பானவர் உரோமையிலுள்ள லூத்தரன் பிரிவினை சபையின் ஆலயத்துக்குச் சென்று பிரசங்கம் செய்தார். மே மாதத்தில்

தாய்லாந்து சென்ற அவர், அங்கே பௌத்த மத கோவிலில் புத்த பிட்சுவை தலை குனிந்து வணங்கினார். அதே ஆண்டில்தான் வத்திக்கான், இத்தாலியுடன் வைத்திருந்த தனது உடன்படிக்கையை ரத்து செய்தது. இந்த நிகழ்வுகளையெல்லாம் கண்டு மனம் நொந்துபோன லெ•ஃபவர் ஆண்டகை மேற்றராணிமார் அபிஷேகம் செய்வதன் அவசியத்தை உணர ஆரம்பித்தார்.

இந்த ஆண்டு அர்ச். 10-ம் பத்திநாதர் கன்னியாஸ்திரிகள் சபையின் பொது அதிபராக சங். மேரி ஜூட் தாயார் நியமிக்கப்பட்டார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் அப்போஸ்தலத்துவம் பரவியிருந்த வடகிழக்குப் பகுதியும், தென் மேற்கு பகுதியும் ஒரே மாவட்டமாக இணைக்கப்பட்டன.

அர்ச். 10-ம் பத்திநாதர் சபை மெக்ஸிக்கோ, கொலம்பியா, தென் ஆப்பிரிக்கா, ஹலாந்து மற்றும் போர்த்துக்கல் ஆகிய நாடுகளிலும் குருக்கள் இல்லத்தை ஸ்தாபித்தது. சபையின் குரு மாணவர்கள் ஒரு மாதம் உரோமையில் செலவிடும், “உரோமில் ஒரு மாதம்” என்று அழைக்கப்படும் இக்காலம், இவ்வாண்டில்தான் துவக்கி வைக்கப்பட்டது. கோடைகாலத்தில் நடக்கும் இதில் குருமாணவர்கள் திருச்சபை வரலாற்றை கற்று அறிந்துகொள்ளவும், நித்திய நகரின் மேன்மை மிகு அழகை தரிசித்து விசுவாசத்தில் உறுதிப்படவும் இது வழி செய்கிறது.

அக்டோபர் 3-ம் நாள் பாரம்பரிய பூசை செய்வதற்கான ‘அனுமதி’ (Indult) வழங்கப்பட்டது. உரோமை திருவழிபாட்டுச் சங்கம், மேற்றிராசன மேற்றிராணியார் 1962-ம் ஆண்டு உரோமன் பூசைப் புத்தகத்தைப் பயன்படுத்தி பாரம்பரிய பூசையை செய்ய குருக்களுக்கு அனுமதி வழங்கலாம் என்று அறிவிப்பு அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட்டது. ஆனால், ஒரு கொடிய நிபந்தனை அதனோடு வெளிவந்தது. அது என்னவெனில், பாப்பரசர் 6-ம் சின்னப்பரால் பிரகடனப்படுத்தப்பட்ட புதுப்பூசை புத்தகத்தை மறுப்பவர்களோடு எந்த தொடர்பும் இல்லை என்ற பகிரங்க ஆதாரம் இருந்தால்தான் எந்த குருவும் இந்த ‘அனுமதியைப் பெற முடியும். அதோடு மேற்றிராணியார் குறிப்பிடும் சில நாட்களிலும், சூழ்நிலையிலும்தான் அப்பூசை நிறைவேற்றப்பட முடியும். இந்த ‘அனுமதி’ அறிவிப்பு பின்னாளில், ‘எக்ளேசியா தேயி’ என்ற கமிஷனின்

பொறுப்பாளராகவிருந்த அதிமேற்றிராணியார் வந். மேயரின் கையொப்பத்துடன் வந்தது. (இவர் பிரேசில் நாட்டு காம்போஸ் மேற்றிராணியார் அல்ல. -ஆர்.)

அதே ஆண்டு அக்டோபர் 18-ல் பிரான்ஸ் நாட்டின் ஃபிளாவிஞ்னி என்ற இடத்தில் அர்ச். 10-ம் பத்திநாதர் சபை 40 குருக்கள் மற்றும் சில பாரம்பரிய விசுவாசிகளின் தலைவர்கள் கூடி விவாதித்து முடிவில் - உரோம் வெளியிட்ட 'அனுமதி' க்கான நிபந்தனைகளை நிராகரித்து, திருவழிப்பாட்டு மாற்றங்களை சம்பந்தப்படுத்தாமல் பாரம்பரிய பூசையை நிறைவேற்ற குருக்களை அனுமதிக்க வேண்டும் என்ற தமது அறிவிப்பை வெளியிட்டார்கள். இது 'ஃபிளாவிஞ்னி ஆவணம்' என்று அழைக்கப்பட்டது.

ஆண்டின் இறுதியில் அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகை உரோமையில் கர்தினால் ராட்சிங்கரை சந்தித்தார். பிறகு ஆப்பிரிக்காவுக்கு சென்ற அவர், திரும்புகையில் உரோமைக்கு வந்து கர்தினால் காங்ஞோனை சந்தித்தபொழுது உரோமையில் நடைபெறும் தவறுகள், சதிவேலைகளை கேள்விபட்டு வேதனையடைந்தார். இதைப் பற்றி பின்னொரு நாளில் கருத்து தெரிவிக்கையில், "இச்சூழ்நிலை நாம் நினைத்ததைவிட மிகவும் மோசமாகவுள்ளது" என்றார்.

## 1985

சங். சுமிட்பெர்கர் சுவாமி மார்ச் மாதத்தில், பாரம்பரியத்துடனான பிரச்சினையைத் தீர்க்கும்படியாக பாப்பரசரை மன்றாடும் 1,29,849 பாரம்பரிய கத்தோலிக்கர்களின் விண்ணப்பங்கள் அடங்கிய மூன்று பெரிய கட்டுகளை கர்தினால் ராட்சிங்கரிடம் சமர்ப்பித்தார். இதற்கிடையில் புகழ்பெற்ற புத்தகமான "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்" என்ற நூலை அதிமேற்றிராணியார் வந். லெஃபவர் ஆண்டகை எழுதினார்.

பிரான்ஸ் நாட்டில், சர்த்திர் (Chartres) என்ற பேராலயத்திற்கு சுமார் 800 விசுவாசிகள் பாரம்பரிய திருயாத்திரையில் பங்குபெற்றனர். அதன் இறுதியில் கர்தினால் காங்ஞோன் அனுப்பியிருந்த உற்சாகமூட்டும் வாழ்த்து செய்தி வாசிக்கப்பட்டது.

ஜூலை இறுதியில் லெபனானில் உள்தியானம் நடத்தினார்கள். கோடை காலத்தில் சபையின் சார்பாக, இந்தியாவுக்கும், இலங்கை மற்றும் கபோன் நாட்டிற்கும் அப்போஸ்தலிக்க பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அப்போஸ்தலிக்க பயணத்தில் ஈக்கோன் குருமடத்தின் பேராசிரியர் சங். லாரோச் சுவாமி, தியாக்கோன் அந்தோணி எஸ்போசித்தோவுடன் இந்தியாவுக்கு குறிப்பாக தூத்துக்குடிக்கு வருகை தந்தார். அங்கே மாதா அப்போஸ்தலர்கள் சிலரையும், அவர்களின் ஆன்ம குருவான சங்.அந்தோணி சேவியர் சுவாமியையும் சந்தித்தனர். இந்த வருகையே இந்தியாவில் அர்ச்.10-ம் பத்திநாதர் சபை காலூன்ற ஏதுவாக அமைந்தது!

இந்த ஆண்டில்தான் மாதாவை பழிக்கும் தேவ தூஷணமான “Hail Mary” என்ற திரைப்படத்திற்கு எதிராக உலகம் தழுவிய எதிர்ப்பு பிரச்சாரத்தை சபை முன்னின்று நடத்தியது. இதில் சபை குருக்கள் காட்டிய வீர வைராக்கிய விசுவாசம் உலக அரங்கில் கவனிக்கப்பட்டது.

அக்டோபர் மாதத்திலே வந். லெஃபவர் ஆண்டகையின் உடன்பிறந்த சகோதரியான சங்.மரி கிறீஸ்டின் தாயார் வருகை தந்து அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியாவில் ஃபீனிக்ஸ்வில் என்னுமிடத்தில் கார்மெல் மடத்தை ஸ்தாபித்தார்கள்.

## 1986

கர்தினால் காங்ஞோன் வந். லெஃபவர் ஆண்டகையை உரோமைக்கு ஜனவரி மாதத்தில் அழைத்து, அர்ச். 10-ம் பத்திநாதர் சபையுடனான பிரச்சினையைத் தீர்க்க கர்தினால் ராட்சிங்கருக்கு தாம் உதவியாக செயல்பட வேண்டும் என்ற பாப்புவின் விருப்பத்தைத் தெரிவித்தார்.

ஜனவரி 14-ம் தேதி, ஆப்பிரிக்காவின் கபோனில் சபையின் இல்லம் ஏற்படுத்தப்பட்டது. அந்நாட்டு ஜனாதிபதி வந்.லெஃபவர் ஆண்டகை தமது நாட்டிற்கு வருகை தரும்படி அழைப்பு விடுத்தார். அவ்வாண்டு வழக்கமான அப்போஸ்தலிக்க பயணமாக ஜப்பான், தென் கொரியா மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளுக்கு சபை குருக்கள் சென்றார்கள்.

இவ்வாண்டு நடந்த சார்க் திருயாத்திரையில் 15,000 விசுவாசிகளும், 100க்கும் மேற்பட்ட குருக்களும் பங்கேற்றனர். சுவிட்சர்லாந்தில் அர்ச்.ஃப்லூ நிக்கோலாஸ் சேத்திரத்துக்கு 3000 பேர் திருயாத்திரையாக சென்றார்கள்.

அமெரிக்காவில் ஆகஸ்ட் மாதத் துவக்கத்தில், மிஷிகனில் உள்ள அர்மடாவில் அர்ச்.10ம் பத்திநாதர் சபை கன்னியாஸ்திரிகளுடைய நவசந்நியாச மடம் அமைக்கப்பட்டது. இந்நாட்டில் சபையின் தலைமையிடம் டெக்ஸாஸ், ழக்கின்சனிலிருந்து மிசோரி நகருக்கு மாற்றப்பட்டது.

அக்டோபரில் பிரான்ஸ் நாட்டில் ஃபிளவிஞ்னியில் அர்ச். மரிய வியான்னி அருளப்பர் குருமடம் துவக்கப்பட்டது.

# 1987

1987-ல் சபை 205 குருக்களைக் கொண்டு 23 நாடுகளில் தமது அப்போஸ்தலத்துவ அலுவல்களை நடத்திக் கொண்டிருந்தது. சபையின் குரு மடங்கள் 263 குருமாணவர்களால் நிரம்பியிருந்தன. இச்சமயத்தில் சபையின் பொதுக்குழு, அமெரிக்காவில் ரிட்ஜ்ஃபீல்ட்-ல் செயல்பட்டு வந்த குருமடத்தை வேறு இடத்திற்கு மாற்றவும், குருமடக் கட்டிடத்தை தியான இல்லமாக மாற்றவும் முடிவு செய்தது. பிரான்சில் ஒரு புதிய கார்மெல் மடம் ஏற்படுத்தப்பட்டது. 1977-ல் சங். மரி கிறீஸ்டின் லெஃபவர் தாயாரால் துவங்கப்பட்ட இந்த கார்மெல் மடம் 7-வது மடம் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்சில், உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்களை அதிலிருந்து விடுவிப்பதற்காக ஜெபிக்க ஒரு பக்த சபையை அர்ச்.10-ம் பத்திநாதர் சபை உருவாக்கியது. இது ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து தற்போது பிரான்சில் அதற்கென்று தனி சிற்றாலயத்தைக் கொண்டுள்ளது. இந்த வருட ஜூன் மாத குருப்பட்டத்தின் போது அதிமேற்றிராணியார், நிகழ்த்திய பிரசங்கத்தில், எல்லா எச்சரிப்புகளையும் மீறி, பாப்பரசர் யூத ஜெபக் கூடத்திற்கு மேற்கொண்ட விஜயம், அசிசியில் நடத்திய சர்வ சமய கூட்டம் போன்றவைகளால் வத்திக்கான் இப்போது இருளில் மூழ்கியிருக்கிறது என்ற தமது கருத்தை வெளியிட்டார். இந்த நிலையில் குருத்துவத்தைக் காப்பாற்ற மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்வது தமது கடமை என்பதை குறிப்பிட்டார். அவ்வாண்டு 21 புதிய குருக்கள்

குருப்பட்டம் பெற்றார்கள். 130 குருக்களும், 6000 விசுவாசிகளும் குழுமியிருக்க மேற்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

வினோனா நகரிலுள்ள அர்ச்.சாமிநாதர் சபைக்குச் சொந்தமான ஒரு பெரிய கட்டிடம் குருமடத்திற்காக வாங்கப்பட்டது.

ஜுலையில் கர்தினால் ராட்சிங்கர் வந். லெ∴பவர் ஆண்டகைக்கு, பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இறுதியான தீர்க்கமான முன்மொழிதல்களை வழங்கி கடிதம் எழுதியிருந்தார். அதில், ஒரு கர்தினாலை அனுப்பி சபையின் அலுவல்களை பார்வையிடுவதும் ஒன்றாகும். அதன்படி, வந்.லெ∴பவர் ஆண்டகை வத்திக்கான் சென்றார். அங்கே நடந்த மேற்றிராணிமார்களின் கூட்டத்தில் கர்தினால் ராட்சிங்கர் அர்ச். 10-ம் பத்திநாதர் சபைக்கு அப்போஸ்தலிக்க வருகையாளராக கர்தினால் காங்ஞோன் ஆண்டகையை பாப்பரசர் நியமித்துள்ளதை அறிவித்தார்.

ஜுலை 26-ல் ஆர்வமும் இளமையும் நிறைந்த குருப்பட்டம் பெற்று ஒரு வருடமே ஆன நிலையில், இந்தியாவுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த சங். ஸ்டீபன் அப்தூ சுவாமி நியூசிலாந்தில் ஒரு கார் விபத்தில் பலியானார்;.

## 1988

ஆஸ்திரேலியாவில் திருச்சிலுவை குருமடம் 14 மாணவர்களோடு அர்ச்.சூசையப்பர் திருநாளின் போது திறக்கப்பட்டது.

ஜுன் 30-ம் தேதி மூன்று மேற்றிராணிமார்களை தாம் அபிஷேகம் செய்யப்போவதாக அதிமேற்றிராணியார் ∴பிளவிஞ்னியில் தொலைக்காட்சி புகைப்படக்காரர்கள் முன்னிலையில் பிப்ரவரி மாதம் அறிவித்தார்.

மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்யப் போகிறேன் என்ற லெ∴பவர் ஆண்டகையின் அறிவிப்பால் வத்திக்கான் குழம்பிப் போனது. தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ஓர் உடன்படிக்கை மே மாதம் 5-ம் தேதி அதிமேற்றிராணியாருக்கும் வத்திக்கானுக்குமிடையே கையெழுத்தானது. அதற்கு மறுநாள், தாம் விதித்திருந்த நிபந்தனைகளில் எதுவும் நிறைவேற்றப்படும் என்ற உறுதிமொழி எதுவும் உடன்படிக்கையில்

கூறப்படவில்லை என்பதை கண்டுபிடித்த வந்.லெ.ஃபவர் ஆண்டகை தாம் அறிவித்தபடி துணை மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்யும் முயற்சியைத் தொடர்ந்தார்.

ஜூன் 29-ம் ஈக்கோன் குருமடத்தில் நடந்த குருப்பட்டத்தின் போது, இரண்டு பிரமாணிக்கமுள்ள மேற்றிராணிமார்கள் மற்றும் உலகமெங்கும் வந்திருந்த 173 குருக்கள் புதிதாகக் குருப்பட்டம் பெறுபவர்களின் சிரசில் கைகளை வைத்து ஜெபித்தனர். அன்று மாலையில் உரோம், அதிமேற்றிராணியார் மேற் கொள்ளவிருக்கும் அபிஷேகச் சடங்கைத் தடுக்கும் தனது கடைசி முயற்சியை மேற்கொண்டது. அதன்படி ஒரு அழகிய கருப்பு மெர்சிடஸ் லிம்முசின் கார் லெ.ஃபவர் ஆண்டகையை உரோமுக்கு அழைத்துச் செல்ல அனுப்பப்பட்டது, அதற்கு ஆண்டகையவர்கள் மறுப்புத் தெரிவித்தார்.

மறுநாள் ஜூன் 30-ம் தேதி 8000 விசுவாசிகள் குழுமியிருக்க, பாரம்பரியத்தின் அலுவலைத் தொடர, கத்தோலிக்க மேற்றிராணிமார்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க அபிஷேக வைபவம் நடந்தேறியது. வந். ரிச்சர்ட் வில்லியாம்சன், வந். திஸ்ஸியே தே மலரே, வந். பெர்னார்டு ஃபெல்லே, மற்றும் வந். அல்போன்ஸோ தே கலரேட்டா என்ற இந்த நால்வரும் மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டார்கள்.

சபையின் புதிய மேற்றிராணிமார்கள் எந்தவிதமான ஓய்வும் எடுத்துக் கொள்ளாமல் உலகமெங்கிலும் உறுதிப்பூசுதல் கொடுப்பதற்காக நீண்ட பயணங்களை உடனடியாகத் துவக்கினார்கள். வந். வில்லியாம்சன் ஆண்டகை இங்கிலாந்து, அயர்லாந்து, தென் ஆப்பிரிக்கா, ஸிம்பாவே, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஹவாய் நாடுகளுக்கு பயணமானார். வந். ஃபெல்லே ஆண்டகை ஆசிய நாடுகள், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்தார். இவ்வாண்டு அக்டோபர் மாதம் அமெரிக்காவின் வினோனாவில் குருமடம் திறக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் சிட்னியில் நமது சபையின் கன்னியாஸ்திரிகள் ஒரு மடத்தைத் திறந்தனர்.

## 1989-1990

இந்த ஆண்டில், சபையானது மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயத்திற்கு தோத்திரமாக இடைவிடாத நவநாள் பூசையைத் துவக்கியது. இதன்படி, உலகமெங்குமுள்ள சபையின் இல்லங்களில் வெவ்வேறு நாட்களில் தொடர்ந்து திவ்விய சற்பிரசாதம் எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆராதனை செய்வது துவக்கப்பட்டது.

அபிஷேகம் செய்யப்பட்ட ஒரே ஆண்டில் 4 புதிய மேற்றிராணிமார்கள், 34 புதிய குருக்களுக்கு குருப்பட்டம் வழங்கினார்கள். வினோனாவுக்கு இடம் பெயரப்பட்ட அர்ச்.தாமஸ் அக்குயினாஸ் குருமடத்தில் முதல் தடவையாக குருப்பட்டம் வழங்கப்பட்டது.

மே மாதத்தில் சங். சுமிட்பெர்கர் சுவாமி ஹங்கேரி நாட்டுக்கு விஜயம் செய்து 200 விசுவாசிகளுக்கு பாரம்பரிய பூசை செய்வித்தார்.

ஏப்ரலில் ஜெர்மனியிலுள்ள ஃப்ரீட்ரிஷஃபவன் என்னுமிடத்தில் 10,000 விசுவாசிகள் மத்தியில் சபையானது தமது 20-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

கிறிஸ்துமஸ் நேரத்தில்தான் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் நவசந்நியாச மடம் அர்மடாவிலிருந்து மின்னசோட்டரிலுள்ள பிராவர்வில் நகருக்கு மாற்றப்பட்டது.

## 1991

அதிமேற்றிராணியார் வந். மார்செல் லெஃபவர் ஆண்டகையவர்கள் தனது 86-ம் வயதில் பரிசுத்த வாரத்தில், மார்ச் 25-ம் தேதி பாக்கியமான மரணமடைந்தார். அவர் மரித்த நாள் தொன்மையான வேதசாட்சியியலின்படி நமது மீட்பர் மரணமடைந்த நாளாகும்! ஆண்டகையவர்கள் தமது கல்லறையில் பொறிக்கப்பட வேண்டிய வாசகமாக “நான் எதைப் பெற்றுக் கொண்டேனோ அதனையே கையளித்தேன” “Tadidi quod et accepi” என்பதை தேர்ந்தெடுத்திருந்தார்.

சரியாக ஒரு மாதம் கழித்து ஏப்ரல் 25-ல் ஆண்டகையின் நண்பரான வந். தே காஸ்ட்ரோ மேயர் ஆண்டகையும் அவரைப் பின்தொடர்ந்து ஆண்டவரிடம் சென்றார்.

ஜுலையில் சபையின் 4 மேற்றிராணிமார்கள், மறைந்த வந். காஸ்ட்ரோ மேயர் ஆண்டகை, பிரேஸில் நாட்டில் கத்தோலிக்க விசுவாசத்தை காப்பாற்ற மேற்கொண்ட முயற்சிகள் தொடரும்படியாக சங். லூஸினோ ரான்கெல் சுவாமியை மேற்றிராணியாராக அபிஷேகம் செய்தார்கள்.

## 1992-1994

1992-ல் சபையின் அப்போஸ்தலத்துவம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தொடங்கப்பட்டது. செக்கஸ்லோவாக்கியா, ஹங்கேரி, போலந்து, லித்துவேனியா, உக்ரேன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும் சபைக் குருக்கள் பயணமாகி பாரம்பரிய கத்தோலிக்க விசுவாச சத்தியங்களை விதைத்தனர். கென்யா, இலங்கை மற்றும் டோமினிக்கன் குடியரசு நாடுகளுக்கும் சபை குருக்கள் சென்றனர்.

ஆகஸ்ட் மாதத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டில், மணிலாவில் முதல் குருக்கள் இல்லம் (Priory) ஏற்படுத்தப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் சபையின் தலைமையிடம் மென்ஸிங்கன் நகருக்கு வழக்கமான முறையில் திவ்விய பலிபூசை வழங்கி வந்தனர். போர்த்துக்கல், பாத்திமா பதியில் மாதா பேராலயத்துக்கு பின்புறம் ஒர் இல்லம் வாங்கப்பட்டது.

ஆஸ்திரியா நாட்டை மையமாகக் கொண்டு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஞான தேவைகளை நிறைவேற்ற அங்கே ஒரு புதிய குருக்கள் இல்லம் துவக்கப்பட்டது.

ஜுலையில் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் பொதுக்கூட்டம் (Chapter) ஈக்கோனில் கூடியது. அதில் புதிய பொது அதிபராக வந். பெர்நார்டு ஃபெல்லே ஆண்டகை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 1995-2009

இவ்வாண்டுகளில் அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை அபரிமிதமான வளர்ச்சி கண்டது! புதிய ஆலயங்கள் குறிப்பாக 1998 அக்டோபர் மாதத்தில் ஈக்கோன் குருமடத்தில் புதியதோர் ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. 2001-ல் அமெரிக்காவில் கொலோராடாவில் டென்வெர் நகரில் அர்ச். இசிதோர் ஆலயம் கட்டப்பட்டது. பெர்ஜியத்தில் அர்ச்.சூசையப்பர் தேவாலயம் வாங்கப்பட்டது. அர்ச். சூசையப்பர் தேவாலயம் பாரீசில் உள்ள அர்ச். நிக்கோலாஸ் ஆலயத்தைவிட பெரியது. இதே ஆண்டில் அர்ஜென்டினாவில் குருமடத்தில் தேவாலயம் கட்டப்பட்டு மந்திரிக்கப்பட்டது. அதே போன்று சுவிட்சர்லாந்திலும், ஜெர்மனியிலும் புதிய கோவில்கள் கட்டப்பட்டன.

**பரிகாரத் திருயாத்திரைகள் :**

சபையானது அவ்வப்போது நடைபெற்ற துர்மாதிரிகைகளுக்குப் பரிகார முயற்சிகளையும், திருயாத்திரைகளையும் நடத்தியது.

2000-ம் ஆண்டில் மில்லினியம் ஜூபிலி ஆண்டின் ஞானப்பலன்களைப் பெறுவதற்காக உரோமைக்கு பாரம்பரிய திருயாத்திரையை சபை வழிநடத்திச் சென்றது. அதில் சபையின் 4 மேற்றிராணிமார்கள், நூற்றுக்கணக்கான குருக்கள், குருமாணவர்கள், 5000க்கும் அதிகமான விசுவாசிகள் பங்கேற்றனர். இந்த பாரம்பரிய திருயாத்திரையால் நவீன உரோமை அதிர்ந்தது என்றால் மிகையாகாது.

2005-ல் பாத்திமாவுக்கு பரிகாரத் திருயாத்திரையை நடத்தியது. முந்தைய ஆண்டு மே மாதத்தில் அங்கு சர்வமத பிராத்தனையால் ஏற்பட்ட தேவ தூஷணத்திற்குப் பரிகாரம் செய்யும் நோக்குடன் இப்பரிகாரத் திருயாத்திரை நடத்தப்பட்டது.

2008 அக்டோபரில் அர்ச். 10-ம் பத்திநாதர் சபை லூர்துபதிக்கு திருயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்தது. அதில் 20000 விசுவாசிகள் பங்கேற்றனர்.

**பொதுச் சங்கம் (General Chapter):**

2006-ம் ஆண்டில் சபையின் பொதுச்சங்கம் ஈக்கோன் குருமடத்தில் கூடியது. வந். பெர்நார்டு ஃபெல்லே ஆண்டகையவர்கள் மீண்டும் சபையின் பொது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சங். நிக்கோலாஸ் ஃபலூகர் சுவாமி முதலாவது உதவியாளராகவும், சங். மார்க் அலைன் சுவாமி 2-வது உதவியாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

**ஜெபமாலைப் போர்கள்:**

இவ்வருடங்களில் சபையின் பொது அதிபர் வந். ஃபெல்லே ஆண்டகை மூன்று ஜெபமாலைப் போர்களை அறிவித்தார். 2006-ல் முதல் ஜெபமாலைப் போர் - நோக்கம்: எந்த குருவானவரும் எவ்வித தடங்கலுமின்றி, எவரிடமும் அனுமதி பெறவேண்டியதில்லாமல் பாரம்பரிய திரிதெந்தீன் பலிபூசையை நிறைவேற்றலாம் என்று அறிவிக்கும்படியாக.

2007-ல் 2-வது இடைவிடாத ஜெபமாலைப் போரின் நோக்கம் - அர்ச்.10-ம் பத்திநாதர் சபை மேற்றிராணிமார்கள் மீதான ‘திருச்சபை விலக்க’ ஆணை திரும்பப் பெறப்பட வேண்டும். திருச்சபை பாரம்பரியத்திற்கு மீண்டும் திரும்ப வேண்டும். (மேற்கூறப்பட்ட திருச்சபை விலக்கம் என்ற தண்டனை அநீதியானதென்றும், அது ஒருபோதும் செல்லாது என்பது அர்ச். 10-ம் பத்திநாதர் சபையினுடைய நிலைப்பாடு என்பதை வாசகர்கள் அறிந்துகொள்வார்களாக!)

2009-ல் 3-வது ஜெபமாலைப் போர் - நோக்கம் : மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு பாப்பரசர் உலக மேற்றிராணிமார்களோடு ரஷ்யாவை ஐக்கிய அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதற்காகவும், மரியாயின் மாசற்ற இருதய பக்தி உலகமெங்கும் பரவும்படியாகவும், ஜெபமாலைப் போர்களில் கோடிக்கணக்கான ஜெபமாலைகள் ஜெபிக்கப்பட்டு பாப்பரசரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

**ஜெபமாலைப் போர்கள் தந்த வெற்றிகள்!**

சபையின் சிரேஷ்டர் விடுத்த ஜெபமாலைப் போர்கள் பெரும் வெற்றிகளைத் தந்தன. அவை:

1.2007-ல் பாப்பரசர் “ Motu Proprio-Summorum Pontificum” என்ற தன்னிச்சையான ஆணைமடலில் பாரம்பரிய திரிதெந்தீன் பலிபூசையை விடுவித்தார்.

2. 2009ல் ஜனவரி 21-ம் நாள் பாப்பரசர் அர்ச்.10-ம் பத்திநார் சபையின் 4 மேற்றிராணிமார்கள் மீதான ‘திருச்சபை விலக்கம்’ என்ற ஆணையைத் திரும்ப பெற்றார்.

இதைத் தொடர்ந்து வத்திக்கானுடன் வேத சத்தியங்களைப் பற்றிய பேச்சுவார்த்தை தற்போது நடைபெறுகிறது.

**பிரசுரங்கள்:**

அர்ச்.10-ம் பத்திநாதர் சபை ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் பல பத்திரிகைகள் வெளியிட்டு வருகிறது. குறிப்பாக ஆங்கிலத்தில் ‘ஏஞ்சல்ஸ்’ (Angelus) என்ற பத்திரிகை அமெரிக்காவிலிருந்து வெளிவருகிறது. (நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இப்பக்கங்கள் ஏஞ்சல்ஸ் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையை தழுவி தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.) இது தவிர மற்ற அரிய புத்தகங்களும் ஏஞ்சல்ஸ் பப்ளிகேஷனில் வெளிவருகிறது.

பிரெஞ்சு மொழியில் ‘ஃபிதேலித்தர்’ என்ற பத்திரிகை மூன்று மாதத்திற்கு ஒருமுறை ‘குளோவிஸ்’ என்ற பப்ளிகேஷன் மூலம் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதே போன்று ஜெர்மன் மொழியிலும், இஸ்பானிய மொழியிலும் சில பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன.

ஆசியாவில் ஆங்கிலத்தில் ‘அப்போஸ்தல்’ என்ற பத்திரிகை வருடத்திற்கு 4 முறையும், 2006-ம் வருடம் தமிழ் மொழியில் ‘சால்வே ரெஜினா’ என்ற பத்தரிகை தொடங்கப்பட்டு, ‘சாங்த்தா மரியா’ என்ற பெயர் மாற்றத்துடன் மாதந்தோறும் வெளிவந்துக் கொண்டிருக்கிறது.

1999-ல் பாரம்பரிய கத்தோலிக்க விசுவாசம் மற்றும் திவ்விய பலிபூசை பற்றிய குறிப்புகள் அடங்கிய கடிதமான பிரான்ஸ் நாட்டிலுள்ள அனைத்து குருக்களும் அனுப்பப்பட்டது. இதில் சுமார் 300 குருக்கள் இந்த கடிதத்தைக் குறித்து ஆர்வத்தோடு தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

2001 பிப்ரவரியில் நவீனப் பூசை குறித்தான" The Problem of the Liturgical Reform" என்ற ஆய்வு புத்தகம் பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பருக்கு அனுப்பப்பட்டது. அதே ஆண்டில் "DICI" என்ற அர்ச். 10-ம் பத்திநாதர் சபையினுடைய அதிகாரப்பூர்வமான தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டது. 2002-ல் அமெரிக்காவிலுள்ள செயின்ட் மேரிஸ் அகடாமி மற்றும் கல்லூரியில் ஒரு வானொலி தகவல் நிலையம் தொடங்கப்பட்டது. கிழக்கு ஐரோப்பாவில் அர்ச்.மாக்ஸிமில்லியம் கோல்பே என்ற பக்த சபை புதுப்பிக்கப்பட்டது. 2003-ல் 'மாத்தெர் தேயி' (Mater Dei) என்ற பத்திரிகை இங்கிலாந்தில் வெளிவரத் தொடங்கியது.

பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பருடைய 25-வது வருட நினைவையொட்டி அர்ச்.10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் சிரேஷ்டர் வந்.பெர்னார்ட் ஃபெல்லே பரி.உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால்மார்களுக்கு, 2-ம் வத்திக்கான் சங்கத்தின் மூலமாக கடைபிடிக்கப்பட்டு வரும் எக்குமெனிசம் மற்றும் புதிய பூசையினுடைய விளைவுகளைப் பற்றி "From Ecumenism to Silent Apostasy" என்ற புத்தகத்தை அனுப்பி வைத்தார்.

2007-ல் பாப்பசர் Motu Proprio-Summorum Pontificum என்ற தன்னிச்சையான ஆணைமடலை வெளியிட்டதை தொடர்ந்து அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்கள் பாரம்பரிய பலிபூசையை குருக்கள் கற்றுக்கொள்வதற்கு உதவியாக DVD -களை சுருக்கமான பூசைப் புத்தகங்களோடு இலவசமாக அனுப்பி கொடுத்தது.

## 2010

இவ்வாண்டு அர்ச். 10-ம் பத்திநாதர் சபை அதனுடைய 40வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.

உலகின் அனைத்து நாடுகளிலும் பரவியிருக்கும் இச்சபை இந்த ஆண்டை சிறப்பாக கொண்டாட முனைந்தது. அமெரிக்காவில் அக்டோபர் 15-ம் தேதி முதல் 17-ம் தேதி வரை ஏஞ்சல்ஸ் (Angelus) அச்சகம், சபையின் வட அமெரிக்க மாவட்டத்தில் ஒரு சிறப்பு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. இதில் வந். ஃபெல்லே ஆண்டகை தலைமையேற்று உரையாற்றினார்.

இன்று 40 வது ஆண்டை நிறைவு செய்திருக்கும் அர்ச்.10-ம் பத்திநாதர் குருக்கள் சபையில் 4 மேற்றிராணிமார்களும், 529 குருக்களும், 233 குருமாணவர்களும், 104 சகோதரர்களும், 160 கன்னியாஸ்திரிகளும் மற்றும் 73 அர்ப்பண சகோதரிகளும் (Oblates) உலகின் 32 நாடுகளில் 183 இல்லங்களில் பணியாற்றுகின்றனர். சபையார், சர்வேசுரனின் மகிமைக்காகவும், நமதாண்டவரின் இரட்சணிய அலுவல் தொடரவும், ஆன்மாக்களின் இரட்சணியத்தை மட்டுமே இலக்காகக் கொண்ட குருத்துவத்தை பேணி காப்பதை தங்களது கடமையாகக் கொண்டுள்ளனர். இதனை நிறைவேற்றுவதற்கு கிறீஸ்துவின் ஏற்பாடகிய திவ்விய பலிபூசைக்கு பிரமாணிக்கமாய் இருக்கிறார்கள்.

எண்ணற்ற வெளியீடுகளும், குருத்துவம் சம்பந்தமான சகல அப்போஸ்தலிக்க அலுவல்களாலும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையானது ஏற்படுத்தப்பட்டதின் நோக்கத்தை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அதிமேற்றிராணியார் வந்.மார்ஷல் லெஃபவர் ஆண்டகை எழுதிய 'ஞான யாத்திரை' (Spiritual Journey) என்ற புத்தகத்தினுடைய முகவுரையில் வியப்பூட்டும் வார்த்தைகளை கூறியிருக்கிறார்:

**" பரிசுத்த தமதிரித்துவத்தின் சன்னதியில் போய் சேருவதற்கு முன்பாக, சர்வேசுரனால் 'டக்கார்' பேராலயத்தில் ஒருநாள் நான் கண்ட கனவு நினைவாவதை, காண்பதற்கு நான் அனுமதிக்கப்படுவேன். அந்த கனவு என்னவென்றால், குருத்துவத்தின் மேன்மை அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இக்காலத்தில், அதனுடைய வேத சத்திய போதனையின் பரிசுத்தத்தோடும், சிநேகத்தோடும், சேசுநாதர் தமது அப்போஸ்தலர்களுக்கு தந்ததும், உரோமன் திருச்சபையினால் 20-ம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை நமக்குக் கொடுக்கப்பட்டிருந்ததுமான கத்தோலிக்க குருத்துவத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதேயாகும்."**

**இப்பொழுது கனவு நினைவானது!**